**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**
**CASE NO.SC. 246 /2017**

**Deposition of P.W.**10

Name : திரு. மகேந்திரன்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated:** 08.10.2025

**A1 , A3, A5, A6 Present. A2, A4, A7** absent Petition filed and allowed

முதல் விசாரணை–

நான் தமிழ்நாடு காவல்துறையில் காவல்துணைகண்காணிப்பாளராக பணியாற்றி ஓய்வு பெற்று தற்போது வேலூரில் வசித்து வருகிறேன். 2011ம் வருடம் நான் தக்கலை வட்ட ஆய்வாளராக பணியாற்றிய போது 31.07.2011ம் தேதி கொற்றிக்கோடு காவல்நிலையத்திலிருந்து காவல் சார்பு ஆய்வாளர் என்னை போண் மூலம் அழைத்தது சம்மந்தமாக காலை சுமார் 09.30 மணிக்கு கொற்றிக்கோடு காவல்நிலையம் சென்று கொற்றிக்கோடு காவல்நிலைய சார்பு ஆய்வாளர் அருள்ரோஸ்கிங் என்பவர் தன்னிடம் புகார்தாரராகிய ஜெயக்குமார் மனைவி சுனிதா என்பவர் கொடுத்த புகாரை பெற்று கொற்றிக்கோடு காவல்நிலைய குற்ற எண்.157/2011 பிரிவுகள் 147, 148, 364, 506(2) இ.த.ச. படி வழக்கு பதிவு செய்து வைத்திருந்தார். அதனை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான

முட்டைக்காடு சந்திப்பு சென்று பி.ஆர்.எஸ். ஓட்டல் முன்பு சென்று 10.00 மணிக்கு விசாரணை செய்து சாட்சிகள் ராஜ். ஜெயபால், ஆகியவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.3, வரைபடம் அ.சா.ஆ.4. பின்னர் சம்பவ இடத்தில் பாதிக்கப்பட்ட நபர் விட்டு சென்ற கறுப்பு கலர் கட்டம் போட்ட லுங்கி ஒன்றை கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.5. அதன் பிறகு எதிரிகளையும், பாதிக்கப்பட்ட நபரையும் தேடி மேக்காமண்டபம், அழகியமண்டபம் ஆகிய இடங்களில் தேடி விசாரித்ததில் பாதிக்கப்பட்ட நபரை அழகியமண்டபத்தில் இறக்கி விட்டு விட்டு சென்று விட்டதாக தெரிய வந்ததில் அவரை கடத்த பயன்படுத்திய வாகனம் மற்றும் எதிரிகள் சுவாமியார்மடம் நோக்கி சென்றதாக பாதிக்கப்பட்டவர் கூறினார். எனக்கு கிடைத்த ரகசிய தகவல் படி சுவாமியார்மடம் பஸ் நிறுத்தம் அருகே நின்று கொண்டிருந்த ஜாண்கெட்டியார் மற்றும் ராபின்சன் ஆகியவர்களை கைது செய்து விசாரித்ததில் மேற்படி நபர்கள் தானாக முன் வந்து சாட்சிகளான ராஜா ரஞ்சித் மற்றும் கிருஷ்ணன் ஆகியவர்கள் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தனர். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி ஜாண்கெட்டியாரிடமிருந்து G Five Cell Phone –1. Rs.500/– 4 தாள்கள் (மொத்தம் 2,000/–) பணத்தையும் அருகே நின்றிருந்த KL 03 A 2673 அம்பாசிடர் கார் வெள்ளை நிற கார் ஒன்றையும் அத்தாட்சியில் கைப்பற்றினேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.6. அத்தாட்சிகள் அ.சா.ஆ.7 மற்றும்

அ.சா.ஆ.8ல் கைப்பற்றினேன். G Five Cell Phone சா.பொ.2, பணம் ரூ.2000/- சா.பொ.3, KL 03 A 2673 வெள்ளை நிற அம்பாசிடர் கார் சா.பொ.4. மேலும் சாட்சிகள் சுனிதா, ஜெயக்குமார், சதிஷ்குமார், சதிஷ்குமார், பிரசாத், நாகேந்திரன், மீரான், ஜெயபால், ராஜ், ராஜா, கிருஷ்ணன், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் அருள்ரோஸ்கிங் ஆகியவர்களையும் விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி எதிரிகள் ஆல்பர்ட், ராஜேஷ் ரெஜி, வினிஸ்டி, செல்வின் ஆகியவர்களை தேடியதில் மேற்படி நபர்கள் நீதிமன்றத்தில் சரணடைந்து முன்பிணை பெற்றுவிட்டார்கள். எனது விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

கொற்றிக்கோடு காவல்நிலையம் புறகாவல்நிலையம் என்றால் சரிதான். சம்பவ சமயம் நான் தக்கலை வட்ட காவல் ஆய்வாளராக பணியாற்றினேன். வழக்கு பதிவு செய்த அன்றே வழக்கு பதிவு செய்த சார்பு ஆய்வாளரை விசாரித்தேன். இவ்வழக்கு பதிவு செய்த ஒரு வாரம் கழித்து வழக்கு பதிவு செய்த சார்பு ஆய்வாளர் இடமாற்றம் செய்யப்பட்டார். அதன் பிறகு பணிஇடைமாற்றம் செய்யப்பட்டார்கள் என்றால் சரிதான். அ.சா.2 ஜெயக்குமார் மீது கொற்றிக்கோடு காவல்நிலையத்தில் போக்கிரி பட்டியல் உண்டு என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் அ.சா.2ன் அண்ணன் வீட்டில் வாடகைக்கு வசித்து வந்தார் என்றால் சரிதான். அ.சா.2-க்கும், சார்பு ஆய்வாளருக்கும் கள்ள தொடர்பு இருந்ததாக தகவல் வெளியாகி பணியிடை நீக்கம் செய்யப்பட்டார் என்றால் சரிதான். ரூ.2,000/- தாள் கைப்பற்றியிருந்தால் அதற்குரிய எண்களை குறிப்பிட்டிருப்பேன் என்றால்

சரிதான். செல்போனை நான் கைப்பற்றினேன் அதனை என்னால் அடையாளம் காட்ட முடியும். கைப்பற்றப்பட்ட செல்போனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளேன். நான் சாட்சிகள் முன்னிலையில் எவ்வித பொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. அ.சா.2-க்கு ஆதரவாக உதவி ஆய்வாளர் பதிவு செய்த வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**<u>2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

2வது எதிரியை சம்பவ நாளிலேயே அழகியமண்டபத்தில் வைத்து விசாரித்தேன். அழகியமண்டபத்தில் வைத்து விசாரித்ததாக ஆவணங்களிலிருந்து துலங்காது. ஜெயக்குமாரை விசாரிக்காததால் அழகியமண்டபத்தில் வைத்து விசாரித்த விபரம் துலங்காது என்றால் சரியல்ல. அழகியமண்டபத்தில் இறக்கி விட்டு விட்டு சென்றதாக முதல் விசாரணையில் கூறியது ஆவணங்களிலிருந்து துலங்காது. ஜெயக்குமார் எனது விசாரணையில் அவரது மனைவி கொடுத்த தகவலின் அடிப்படையில் போலீசார் என்னை வந்து மீட்டார்கள் என்று கூறவில்லை. பின்னர் போலீசார் ஜெயக்குமாரை கொற்றிக்கோடு காவல்நிலையம் அழைத்து சென்றதாகவும் வாக்குமூலம் கொடுக்கவில்லை. ஜெயக்குமாரிடமிருந்து வெள்ளை கலர் கறுப்பு கட்டம் போட்ட சாரத்தை கைப்பற்றியதாக என்னிடம் வாக்குமூலம் கொடுக்கவில்லை. சாரம் இல்லாமல் தான் ஜெயக்குமார் சென்றுள்ளார். அவரை இறக்கி விட்ட பிறகு எங்கிருந்து சாரம் வாங்கினார் என்று எனக்குத் தெரியாது. போலீசார் விசாரிக்கும் போது சாரம் உடுத்தியிருந்தார். உண்மையில் ஜெயக்குமார் சாரம் உடுத்தியிருந்தால் எங்கிருந்து வாங்கினார் என்பது தெரிய

வந்திருக்கும் என்றும், அப்படி ஒரு சம்பவமே நடக்காததால் தான் அது பற்றி கூறவில்லை என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளர் ஜெயக்குமாருக்கு வேண்டப்பட்டவர் என்பதால் பொய்யாக சாரத்தை கைப்பற்றியதாக குறிப்பிட்டு வேறு ஒரு சாரத்தை வாங்கி ஆஜர்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. அ.சா.3 என்னிடம் சிறிது நேரத்தில் தனது கணவரை மீட்டு கொண்டு வந்ததாக எனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை. சுனிதா என்னிடம் செல்போண் மற்றும் பணம் ரூ.2000/- கைப்பற்றப்பட்டதாக வாக்குமூலம் கொடுக்கவில்லை. ஜெயக்குமார் சம்பவ இடத்திற்கு நடந்து வந்ததாக வாக்குமூலம் கொடுத்துள்ளார். இருசக்கர வாகனத்தில் வந்ததாக கூறியிருந்தால் அது பொய்யாக இருக்கலாம். கார் யாருக்கு உரிமைப்பட்டது என்று நான் விசாரிக்கவில்லை. காரின் உரிமையாளரை நான் விசாரிக்கவில்லை. நான் சொல்வது போல் காரில் கடத்தவில்லை என்றும், அவ்வாறு கடத்தப்பட்டிருந்தால் காரின் உரிமையாளரை விசாரித்திருப்பேன் என்றால் சரியல்ல. காரின் பதிவுச்சான்று தாக்கல் செய்யவில்லை. நான் சொன்னது போல் வாகனம் வராததால் பதிவுச்சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கத்தி எதுவும் கைப்பற்றவில்லை. நான் சொன்னது போல் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடம் மக்கள் நெருக்கமான இடம் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் உள்ள நபர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சம்பவம் நடக்காததால் தான் கத்தி கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. அத்தாட்சி சாட்சிகள்

ஜெயக்குமாருக்கு வேண்டபட்டவர்கள் என்றும், உண்மையான சாட்சிகள் இல்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர் சாட்சிகளும் உண்மையானவர்கள் அல்ல என்றால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலமும், காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சுவாமியார்மடத்தில் வைத்து எதிரிகளை கைது செய்யவில்லை என்றும், 2வது எதிரியை வீட்டிலிருந்து கைது செய்தேன் என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளர் 2வது எதிரியை வீட்டிற்கு சென்று கைது செய்தார் என்றால் சரியல்ல. சார்பு ஆய்வாளர் என்னை அழைத்ததாக நாட்குறிப்பில் இருந்து துலங்காது. புகார் மனு போலீசாரால் எழுதப்பட்டது என்பதால் தான் 27/11 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வயது மற்றும் ஆண்டை குறிப்பிடுவது போலீசாரின் பழக்கம் என்பதால் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முதல் தகவல்அறிக்கையை ஜெயக்குமாருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 2வது எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. 2வது எதிரிக்கும் சா.பொ.1–க்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. 2வது எதிரிஇருதய அறுவை சிகிச்சை செய்து வீட்டிற்குள்ளே இருக்க கூடிய நபர் என்றால் சரியல்ல. நான் சாட்சிகளை நேரடியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

**<u>3, 5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

3, 5வது எதிரிகளின் பெயரை புகார் மனுவில் குறிப்பிடவில்லை

என்றால் சரியல்ல கண்டால் தெரியும் நபர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 3, 5 எதிரிகள் கையில் ஆயுதங்கள் இருந்ததாக சாட்சிகள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 2வது சாட்சியை மிரட்டியதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். காரில் ராபின்சன் வந்ததாகவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. 3, 5 எதிரிகளை அவர்கள் வீட்டிலிருந்து கைது செய்து கொண்டு சென்றேன் என்றால் சரியல்ல. 3, 5 எதிரிகள் கையில் ஆயுதங்கள் இருந்ததாக குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடவில்லை. 3, 5 எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல

**<u>4வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

4வது எதிரியின் பெயர் புகார் மனுவிலும், முதல் தகவல் அறிக்கையிலும் குறிப்பிடப்படவில்லை. சுனிதாவை நான் 11.00 மணிக்கு சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தேன். ஜெயக்குமாரை அழகியமண்டபத்தில் வைத்து 02.30 மணிக்கு பார்த்தேன். நான் பார்க்கும் போது ஜெயக்குமார் உடலில் காயங்கள் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு காலை 10.00 மணிக்கு போனேன். மாதிரி வரைபடத்தில் ஓட்டலின் மேற்கூரை எதனால் அமைக்கப்பட்டது என்று குறிப்பிடவில்லை. நான் சம்பவ இடத்திற்கு செல்லாததால் தான் மேற்கூரை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் உள்ள சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. ஜெயக்குமார் குற்ற பின்னணி கொண்டவர் என்றால் சரிதான். வாகன உரிமையாளரை சாட்சியாக விசாரிக்கவில்லை. 4வது எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடம் செல்லாமல், சாட்சிகளை விசாரிக்காமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல்



செய்தேன் என்றால் சரியல்ல.

**<u>6வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

புகாரிலும், முதல் தகவல் அறிக்கையிலும் காரின் நிறம் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. குற்ற இறுதி அறிக்கையில் காரின் நிறம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் பி.எம்.எஸ்.ஓட்டல் காட்டப்படவில்லை என்றால் சரிதான். மீராஷாகிப்பை தவிர சம்பவ இடத்தில் உள்ள நபர்களை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. காரை யார் ஓட்டி வந்தார் என்பது விசாரணையில் தெரிய வரவில்லை. காரின் உரிமையாளரை விசாரிக்கவில்லை. அத்தாட்சியில் 6வது எதிரியிடமிருந்து கார் கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்படவில்லை. அத்தாட்சி சாட்சிகளாக சுவாமியார்மடம் பகுதியில் உள்ளவர்களை விசாரிக்கவில்லை. வழக்கிற்கும், 6வது எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>7வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கண்ணால் கண்ட சாட்சிகளாக சுனிதா, அஜிஸ்குமார், சதிஷ்குமார், பிரசாந்த் நாகேந்திரன் மீராஷாகிப் ஆகியவர்களை காட்டியுள்ளேன் என்றால் சரிதான். சாட்சிகள் 7வது எதிரி சம்பவத்தில் ஈடுபட்டதாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. ஜெயக்குமாரும் 7வது எதிரி சம்பவத்தில் ஈடுபட்டதாக சாட்சியம் அளிக்கவில்லை. நான் சொன்னதுபோல் எவ்வித சம்மந்தமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்களை சொன்னது போல் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. 7வது எதிரி வழக்கறிஞர் என்று எனக்குத் தெரியாது. இறுதி அறிக்கையில் வழக்கறிஞர் என்று குறிப்பிட்டுள்ளேன். குற்ற



இறுதி அறிக்கை நான் தயார் செய்யாததால் 7வது எதிரி வழக்கறிஞர் என்பது தெரியாது என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. 7வது எதிரி

மீதுள்ள தனிப்பட்ட காழ்புணர்ச்சியின் காரணமாக அவரை வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 7வது எதிரி வழக்கறிஞர் என்கறும் தெரிந்தும் தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.